# 31 இணையர்களுக்கு மணவிழா: முதல்வர் உரை…!

முதல் பக்கத் தொடர்ச்சி

➢ நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு எடுத்த சிறப்புத் திட்டங்களில் ஒன்று என்னவென்றால், 1000 ஆண்டு பழமை யான திருக்கோவில்களை பாதுகாப்பது ஆகும். 426.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2774 கோவில்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 37 கோவில்களில் குட முழுக்கு நடைபெற்றுள்ளது.

➢ திருக்கோவில்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வழங்கி அதில் இருந்து கிடைக்கப் பெறும் வட்டித் தொகையில் வழிபாடுகள் நடந்து கொண்டிருக்கிறது. அந்த தொகையை 2 இலட்சமாக உயர்த்தியதும் நம்முடைய கழக அரசு தான். இத்திட்டத்தின்படி, 17 ஆயி ரம் கோவில்களுக்கு முதலீட்டுத் தொகையாக 200 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தோம். இந்த 17 ஆயிரம் கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை நமது அரசு தான் தொடங்கியது.

➢ கழக அரசு பொறுப்பேற்ற பிறகு மலைக் கோவில்களிலும், அதிக அளவில் பக் தர்கள் வருகை தரும் திருக்கோவில்களிலும் பக்தர்களின் நலன் கருதி மருத்துவ மையங் கள் அமைக்கப்பட்டன. 17 கோவில்களில் மருத்துவ மையங்கள் அமைக்கப்பட்டு, 5 இலட்சத்து 98 ஆயிரம் பக்தர்கள் இது வரை பயனடைந்திருக்கிறார்கள்.

➢ 500 மூத்த குடிமக்கள் இரா மேஸ்வரம், காசிக்கு ஆன்மிகப் பய ணம் அழைத்துச் செல்லப்பட்டிருக் கிறார்கள்.

➢ 1008 மூத்த குடிமக்கள் அறு படை வீடுகளுக்கு ஆன்மிகப் பய ணம் அழைத்துச் செல்லப்பட் டுள்ளார்கள்.

➢ 1003 பக்தர்கள் ஆடி மாதத் தில் அம்மன் கோவில்களுக்கு ஆன் மிகப் பயணமாக அழைத்துச் செல் லப்பட்டுள்ளார்கள்.

➢ 1014 பக்தர்கள் புரட்டாசி மாதத்தில் வைணவ கோவில்க ளுக்கு ஆன்மிக பயணமாக அழைத் துச் செல்லப்பட்டுள்ளார்கள்.

➢ இரண்டு திருக்கோவில்களில் மட்டும் இருந்த நாள் முழுவதும் அன் னதானம் வழங்கும் திட்டத்திற்கு ஒன்பது கோவில்களுக்கு விரிவுப்படுத்தியிருக்கிறோம்.

➢ ஒரு வேளை அன்னதானம் வழங் கும் திட்டம் இப்போது 760 கோவில்களில் நடைபெற்று வருகிறது. இதன் மூலமாக தினந்தோறும் 92 ஆயிரம் பேர் இதனால் பசியாறுகிறார்கள்.

➢கடந்த ஆட்சியில், தங்க முதலீடு திட்டம் செயல்படாமல் இருந்தது. இது தொடர்பான நீதிமன்ற வழக்குகளை நாம் வென்று, ஓய்வு பெற்ற நீதிபதிகளின் கண்காணிப்பில் இத்திட் டத்தை செயல்படுத்திக்கொண்டு இருக்கி றோம். 257.22 கோடி ரூபாய் மதிப்பிலான 442 கிலோ சுத்த தங்கக் கட்டிகள் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 5.79 கோடி ரூபாய் ஆண்டுக்கு வட்டியாகக் கிடைக் கிறது. இதனை கோவில்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தி வருகிறோம்.

**கோவில் தொடர்பான வழக்குகளில் வெற்றி!**

இதெல்லாம் கொஞ்சம்தான். இப்படி ஏரா ளமான சாதனைகளை இந்து சமய அறநி லையத் துறை செய்து வருகிறது. இதைப் பற்றி சேகர்பாபுவிடம் கேட்டால், ஒரு புத்தக மாகவே போட்டு வழங்கிவிடுவார். அந்த அளவுக்கு திட்டங்களும், சாதனைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. அறநிலையத் துறையின் சிறப்பான செயல்பாட்டில் முக்கிய மானது என்னவென்றால், கோவில் தொடர் பான வழக்குகளை எதிர்கொள்வது ஆகும். அதில் கண்ணுங்கருத்துமாக இருந்து வழக்கை நடத்தி தொடர்ந்து வெற்றி பெற்று கொண்டிருக்கிறோம். அதற்கு உதாரணமாக சொல்லவேண்டும் என்று சொன்னால்,

➢ அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் தொடர்பான வழக்கு 2006 முதல் நடந்து வந்தது. அதில் வெற்றி கரமான தீர்ப்பைப் பெற்று 24 அர்ச்சகர்கள் இன்றைக்கு நாம் நியமித்திருக்கிறோம்.

➢ தமிழில் குடமுழுக்கு நடத்துவது குறித்து உடன்பாடான தீர்ப்பை பெற்றுள் ளோம்.

➢ திருக்கோவில்களில் தமிழில் அர்ச் சனை செய்தல் திட்டத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அரசுக்கு சாதகமான தீர்ப்பு வந்துள்ளது.

➢ திருக்கோவில்களில் நடைபெறும் திருப்பணிகளுக்கு அனுமதி வழங்க தடை யாக இருந்த வழக்கில் இறுதித் தீர்ப்பை பெற்று திருப்பணிகளை தொடங்கினோம்.

➢ 1988 ஆம் ஆண்டு முதல் நடந்து கொண்டு வந்த திருவான்மியூர் பாம்பன் சுவாமி கோவில் குறித்த வழக்கை முடித்து வைத்து, குடமுழுக்கு விழா நடத்தி இருக்கி றோம்.

➢ 1995 முதல் நடந்து கொண்டு வந்த சிவகங்கை அருள்மிகு சுவர்ண மூர்த்தீஸ் வரர் கோவில் தேரோட்ட வழக்கையும் முடித்து தேரோட்டத்தை சிறப்பாக நடத்தி இருக்கிறோம்.

**ஒவ்வொரு முறையும் இந்த வழக்குகளில் வெற்றி பெற்று நேராக பார்த்தாலும் சரி, டெலிபோனில் பேசினாலும் சரி மகிழ்ச்சியோடு நம்முடைய சேகர்பாபு அவர்கள் அண்ணா, இந்த வழக்கில் வெற்றி பெற்றுவிட்டோம் என்று அவர் ஒவ்வொருமுறையும் சொல்கின்றபோது எனக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. ஆகவே, சரியான இடத்தில்தான் இந்தத் துறையை ஒப்படைத்திருக்கிறோம்; சரியான நபரை தான் நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்று அப்போது எனக்கு ஒரு பூரிப்பு வரும். என்னையே அறியாமல் ஒரு மகிழ்ச்சி வரும். சட்ட நுணுக்கங்களை அவர் விவரித்து சொல்லும்போது, இன்னும் சிறிது நாட்களில் அவரே ஒரு தேர்ந்த வழக்கறிஞராக மாறிவிடுவாரோ என்ற சந்தேகம் கூட வந்திருக்கிறது. அந்த அளவுக்கு அவர் ஊறிப்போயிருக்கிறார்.**

➢ பொழிச்சலூர் அருள்மிகு அகத்தீஸ் வரர் கோவில் தொடர்பான வழக்கு 2003 முதல் நடைபெற்று வந்தது. அதில் சாதகமான தீர்ப்பை பெற்று கோவில் சொத்தை பாது காத்தோம்.

➢ சிதம்பரம் அருள்மிகு சபாநாயகம் திருக்கோவில் கனகசபை மீது ஏறி வழிபாடு நடத்துவது குறித்து தொடரப்பட்ட வழக்கில் உடன்பாடான தீர்ப்பை பெற்றதால், பக்தர்கள் இப்போது தடையின்றி வழிபாடு செய்து வரு கிறார்கள்.

➢ செயல் அலுவலர் நியமனம், பணி யாளர்கள் மாறுதல், கல்லூரிகள் தொடங்கு தல், தங்கக் கட்டிகள் உருக்குதல், அறங்கா வலர் குழு அமைத்தல், அறங்காவலரிடம் செங்கோல் வழங்க மறுத்தல் என பல்வேறு வழக்குகள் போடப்பட்டன. அதிலும் வெற்றிப் பெற்றிருக்கிறோம்.

➢ திருச்செந்தூர், திருவட்டாறு, சங்க ரன்கோவில், வடலூர், வேலூர், கந்தர்வ கோட்டம், கள்ளக்குறிச்சி, தேக்கம்பட்டி, மயி லாப்பூர் என பல்வேறு ஊர் கோவில் வழக்கு களை முடிவுக்கு கொண்டு வந்து கோவில்க ளின் செயல்பாடுகளை தடங்கலின்றி செய்து வருகிறோம்.

இதையெல்லாம் உண்மையான பக்தர் கள் பாராட்டுகிறார்கள்; நன்றாக கவனியுங் கள் உண்மையான பக்தர்கள் பாராட்டுகிறார் கள். பக்தியை தங்களது பகல் வேஷ அரசியலுக்கு பயன்படுத்தி வருபவர்களால் இதனை தாங்கிக் கொள்ள முடியவில்லை. தலைவர் கலைஞர் அவர்கள் பராசக்தி திரைப்படத்தில் ஒரு வசனத்தை வைத்திருப் பார்; கோயில்கள் கூடாது என்பது நம்முடைய கொள்கை அல்ல. கோயில்களை கொடியவர் களின் கூடாரமாக ஆக்கிவிடக்கூடாது என்ப துதான் நம்முடைய இலட்சியம் என்று சொன் னார்.

**நம்முடைய சாதனைகளை தடுக்கத்தான் இப்படிப்பட்ட பல்வேறு வழக்குகள் போடப்பட்டு வருகின்றன. ஆனால் அந்த வழக்குகளை எல் லாம் சட்டப்படி முறியடித்து நம்முடைய சாதனை பயணத்தை தொடர்ந்து கொண்டிருக் கிறோம்.**

ஒவ்வொரு முறையும் இந்த வழக்குகளில் வெற்றி பெற்று நேராக பார்த்தாலும் சரி, டெலி போனில் பேசினாலும் சரி மகிழ்ச்சியோடு நம்முடைய சேகர்பாபு அவர்கள் அண்ணா, இந்த வழக்கில் வெற்றி பெற்றுவிட்டோம் என்று அவர் ஒவ்வொருமுறையும் சொல்கின் றபோது எனக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. ஆகவே, சரியான இடத்தில்தான் இந்தத் துறையை ஒப்படைத்திருக்கிறோம்; சரியான நபரை தான் நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்று அப்போது எனக்கு ஒரு பூரிப்பு வரும். என்னையே அறியாமல் ஒரு மகிழ்ச்சி வரும். சட்ட நுணுக்கங்களை அவர் விவரித்து சொல் லும்போது, இன்னும் சிறிது நாட்களில் அவரே ஒரு தேர்ந்த வழக்கறிஞராக மாறிவி டுவாரோ என்ற சந்தேகம் கூட வந்திருக்கி றது. அந்த அளவுக்கு அவர் ஊறிப்போயிருக் கிறார்.

**எல்லா மதங்களையும் சமமாக மதிக்கிறோம்!**

அத்தனை மதங்களையும் சம மாக மதித்து, எல்லோருடைய உரி மைகளையும் காக்கின்ற அரசாக நம் முடைய அரசு விளங்கிக் கொண்டி ருக்கிறது. அதனால்தான் இது திரா விட மாடல் அரசு என்று கம்பீரமாக சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

இத்தகைய சிறப்பான ஆட்சி காலத்தில், மணக்கோலம் பூண்டிருக் கக்கூடிய இந்த தம்பதியர்களை மன தார வாழ்த்துவதற்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன். வாழ்க்கையில் அனைத்து நன்மைகளையும் பெற்று நீங்கள் சிறப்போடு வாழ்ந்திடவேண் டும்; அதேநேரத்தில், உங்களிடத்தில் நான் ஒரு அன்பான வேண்டு கோளை வைக்க விரும்புவது, இந்த தம்பதி யர்கள் இன்றைக்கு மணவிழாவை முடித்தி ருக்கிறீர்கள்.

நீங்கள் மணவிழாவை முடித்து உங்களு டைய செல்வங்களை பெற்றுக்கொள்ள இருக் கிறீர்கள். முன்பெல்லாம் செல்வங்கள் என்று சொல்கின்றபோது 16 பெற்று பெருவாழ் வோடு வாழவேண்டும் என்று சொல்வார் கள். 16 என்றால் 16 குழந்தைகள் அல்ல. 16 செல்வங்கள். அதனால், கி.ஆ.பெ. விசுவநா தம் அவர்கள் தன்னுடைய புத்தகத்தில் குறிப் பிட்டுக் காட்டியிருக்கிறார். 16 செல்வங்கள் என்பது என்ன என்று கேட்டால், மாடு, மனை, மனைவி, மக்கள், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், நிலம், நீர், வயது, வாக னம், பொன், பொருள், போகம், புகழ் இது தான் 16 செல்வங்கள். அந்த 16 செல்வங் களை பெற்று வாழுங்கள் என்று தான் அன்றைக்கு வாழ்த்தினார்கள். இப்போது யாரும் 16 செல்வங்களைப் பெற்று வாழுங் கள் என்று வாழ்த்துவது கிடையாது. அள வோடு பெற்று வளமோடு வாழுங்கள் என்று தான் சொல்கிறோம்.

நம்முடைய மணமக்களை நான் அன் போடு கேட்டுக் கொள்ள விரும்புவது உங்க ளுக்கு பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கு அழ கான தமிழ்ப்பெயர்களை சூட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட உணர் வோடு உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழுங்கள்; வாழுங்கள்; வாழுங் கள்; பல்லாண்டு காலம் வாழுங்கள்; என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# சேலத்தில் துணை முதல்வர் உரை…!

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

2020ஆம் ஆண்டு நாம் ஆட்சியில் கூட கிடையாது. அ.தி.மு.க. ஆட்சி நடந்து கொண் டிருந்தது. அவர்கள் கூட களத்தில் இறங்க வில்லை. ஆனால், நாம்தான் முதன்முதலில் களத்தில் இறங்கி மக்களுக்குத் தேவையான பணிகளை நம் உயிரையே துட்சமென மதித்து இறங்கி மக்கள் பணியாற்றினோம்.

இன்னும் அந்தப் பணிகளை நாம் தொய் வில்லாமல் செய்து கொண்டிருக்கிறோம். எதிர்க்கட்சியாக இருந்த போதும் சரி, ஆளும் கட்சியாக இருக்கும் பொழுதும் சரி எப்பொழு துமே மக்களோடு நிற்கின்ற ஒரு இயக்கம் என்றால், அது திராவிட முன்னேற்ற கழகம் தான். எப்பொழுதுமே மக்களுடனே இருக் கின்ற ஒரு அணி என்றால், அது தி.மு.க.வின் இளைஞர் அணிதான்.

இந்த மழைக் காலத்தில் பார்த்தீர்கள் என் றால் எதிர்க்கட்சியாக இருக்கும் போதும் சரி, அ.தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கும் பொழுதும் சரி, எந்த ஒரு பேரிடர் காலத்திலும் மழைக்காலத்திலும் களத்தில் ஒரு அ.தி.மு.க வினரைக்கூட பார்க்க முடியாது. இப்போ தும் அதேதான் நிலைமை. நான் சென்னை யில் மூன்று நாட்கள் சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தேன். எந்த ஒரு இடத்திலும் கூட ஒரு அ.தி.மு.க.வினரையோ, வேறு எதிர்க் கட்சிக்காரரையோ இதுவரைக்கும் நான் பார்த்ததே இல்லை.

எங்கு போனாலும் நம் தி.மு.க. கரை போட்ட வேட்டியைக் கட்டிய கழகத்தினரும், நம் இளைஞர் அணி தம்பிமார்களும்தான் களத்தில் நின்று அந்த உதவிகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். அதனால்தான் நாம் எப்பொழுதுமே மக்களோடு மக்களாக நின்று கொண்டிருக்கிறோம் என்று பெருமையோடு சொல்லிக் கொள்வோம். எனவே, இளைஞர் அணியினர் உங்களால் முடிந்த அளவிற்கு மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கி றேன். அரசுக்கும் மக்களுக்கும் நீங்கள் ஒரு பாலமாக அமைந்திட வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

நான் களத்தில் பார்த்துப் புரிந்து கொண்ட விஷயம் என்னவென்றால், மக்கள் சொல் கின்ற எல்லா கோரிக்கையையும் நிறை வேற்ற முடிகிறதோ, இல்லையோ இப்போது நீங்கள் நிறைய கோரிக்கைகள் வைத்திருக் கிறீர்கள் அல்லவா, அதில் சில கோரிக்கைக ளைத்தான் நிறைவேற்ற முடியும். எல்லா கோரிக்கையையும் நிறைவேற்ற முடிகிறதோ இல்லையோ, ஆனால் அந்தக் கோரிக்கை ளைக் காது கொடுத்து கேட்டாலே, அது பாதி மகிழ்ச்சி ஏற்பட்டுவிடும். அதேபோலத்தான் நாம் மக்களோடு நிற்க வேண்டும் அதை தான் மக்களும் விரும்புகிறார்கள். அதனால் தான் நம் மீது நிறைய நம்பிக்கை வைத்தி ருக்கிறார்கள்.

கடந்த 9 தேர்தல்களிலும் கழகத்திற்கும், நம் தலைவர் அவர்களுக்கும் தொடர் வெற் றியை கொடுத்து இருக்கிறார்கள் என்றால், அது தி.மு.கவின் மீது இளைஞர் அணியின் மீது மக்கள் வைத்திருக்கிற அந்த நம்பிக்கை தான் காரணம். எனவே எப்பொழுதும் இளைஞர் அணியினர் மக்களோடு நில்லுங் கள் என்று உரிமையோடு கேட்டுக்கொள் கின்றேன்.

இளைஞர் அணி நிர்வாகிகளின் பணி களை மண்டல வாரியாக சென்னையில் நம் அலுவலகம் குறிஞ்சியில் நடத்தினோம். நீங் கள் அத்தனை பேரும் வந்து இருந்தீர்கள். ஒவ்வொரு மாவட்டமும் மாவட்ட அமைப்பா ளர், மாவட்ட துணை அமைப்பாளர் தனித்த னியாக அழைத்து, உங்களின் மினிட் புத்த கங்கள், உங்களின் ஒரு வருட கழகப் பணி, இளைஞர் அணி பணி அத்தனையும் ஆய்வு செய்தோம். அதை முடிப்பதற்கு கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் ஆகிவிட்டன.

**பொறுப்பு உயர்வு!**

பெரும்பாலானோர் மிகச் சிறப்பாக செயல் படுகிறீர்கள். அதற்கு என் வாழ்த்துகள். ஒரு சிலர் இன்னும் சிறப்பாகச் செயல்படலாம் என்று நான் நம்புகிறேன். இன்னும் சிலர் அடுத்த கட்டத்திற்குப் போக வேண்டும், பொறுப்பு உயர்வு வேண்டுமென்று எதிர் பார்க்கிறீர்கள், அதுவும் விரைவில் நடக்கும் என்று நம்புகிறேன்.

அதற்கான முழுமுயற்சியையும் எடுப் பேன் என்று உங்களுக்குத் தெரியும். உங்க ளின் பணிகளுக்கு ஏற்ப, என்னால் என்ன செய்ய முடியுமோ அதை தலைவர் அவர்க ளிடம் சொல்லி நிச்சயம் செய்து கொடுக்கி றேன். குறிப்பாக, ஒரு சிலருக்குப் பொறுப்பு உயர்வுகள் வழங்கப்பட்டு, வேறு அணிக ளில் பணியாற்றுகின்ற வாய்ப்பும் வழங்கப் படலாம்.

ஒவ்வொரு மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களை நேரில் சந்தித் தேன். இதேபோல விரைவில் மாநில துணைச் செயலாளர்களுக்கும் ஒரு ஆய்வுக் கூட்டத்தை நடத்துவதாக இருக்கிறேன்.

**வெற்றி யார் கையில்!**

2024ஆம் ஆண்டு தேர்தலில் நீங்கள் அத்தனை பேரும் உங்களை நிரூபித்துக் காட்டி விட்டீர்கள். உங்களின் திறமையை, உங்களின் உழைப்பை நிரூபித்துக் காட்டி விட்டீர்கள். சிறப்பாக செயல்பட்டீர்கள். ஒவ் வொரு தொகுதிக்கும் பிரச்சாரத்திற்கு வரும் பொழுது இளைஞர் அணி தம்பிமார்களுக்கு ஒரு வேண்டுகோள் வைத்தேன். இந்தத் தொகுதியின் வெற்றி யார் கையில் இருக்கி றதோ இல்லையோ, இளைஞர் அணி தம்பி மார்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, அந்த வெற் றியை உறுதி செய்ய வேண்டும் என்று, உங்களுக்கு எல்லாம் ஒரு வேண்டுகோள் வைத்தேன். அதை வெகு சிறப்பாக நீங்கள் செய்து காட்டி இருக்கிறீர்கள்.

அடுத்து வருகின்ற தேர்தல் 2026 சட்ட மன்ற தேர்தல், மிக மிக முக்கியமான தேர் தல். நாம் சந்தித்த 2024ஆம் ஆண்டு நாடா ளுமன்றத் தேர்தல் கிட்டத்தட்ட ஒரு அரை இறுதிதான். உலக கோப்பையில் அரையிறு திப் போட்டி எவ்வளவு முக்கியம். அதில் வெற்றி பெற்று விட்டோம். அடுத்து வரப் போகின்ற 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் தான் உண்மையான இறுதிப் போட்டி .அந்த இறுதிப் போட்டியில் நாம் வெற்றி பெற்றாக வேண்டும்.

அந்த உழைப்பு, அந்த வெற்றி, உங்க ளின் கைகளில்தான் இருக்கிறது. 2026 சட் டமன்ற தேர்தலில் கழகம் தலைமையிலான கூட்டணி, 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகளில் வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டும் என்று தலைவர் சூளுரைத்திருக்கிறார்.

**ஒருங்கிணைப்புக் குழு**

தலைவர் என்ன சொன்னார் தெரியுமா? நான் அதீத நம்பிக்கையின் மீது சொல்ல வில்லை கழக உடன்பிறப்புகள், இளைஞர் அணி தம்பிமார்கள் அனைவர் மீதும் இருக் கக்கூடிய நம்பிக்கையில்தான் இதை நான் சொல்கிறேன் என்று தலைவர் சொன்னார். 200 என்பது இலக்கு. நம் இளைஞர் அணி யின் சார்பாக அந்த 200ஐ தாண்டி வெற்றி பெற வைக்க வேண்டியது நம் கடமை.

2026 சட்டமன்ற தேர்தலுக்கான பணியை இப்பொழுதே நாம் தொடங்கி விட் டோம். தலைவர் அவர்கள் ஒருங்கிணைப் புக் குழுவை அமைத்து இருக்கிறார்கள். இந்த ஒருங்கிணைப்புக் குழு, ஒவ்வொரு அணியாக அழைத்து அவர்களுக்கு என் னென்ன தேவை என்பதை எல்லாம் அறிந்து, அதை நாம் சரி செய்து கொண்டிருக் கிறோம். அவர்களின் கோரிக்கைகளை எல் லாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

நீங்கள் இங்கே வைத்த கோரிக்கைக ளைப் போல பல மடங்கு அதிகமான கோரிக் கைகளை மற்ற அணிகள் வைத்து இருக்கி றார்கள். அந்த கோரிக்கைகளை எல்லாம் கேட்டீர்கள் என்றால், உங்கள் கோரிக்கை கள் எல்லாம் ஒன்றுமே கிடையாது. அதே போல் விரைவில் இளைஞர் அணி நிர்வாகி களையும் சந்தித்து, தேர்தல் தொடர்பாக பல்வேறு விஷயங்களைப் பேச இருக்கி றோம்.

இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு நீங்கள் வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசின் திட்டங் களை மக்களிடம் கொண்டு சேருங்கள். உங் கள் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு என் னென்ன செய்ய வேண்டுமோ, அதை மாவட்ட பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் மூலமாக முடிந்த அளவிற் குச் செய்து கொடுங்கள்.

கழக அமைப்போடு, கட்சி மூத்தவர் களோடு இணைந்து இப்பொழுது இருந்தே தேர்தல் வேலைகளைத் தொடங்குங்கள். வாக்காளர்கள் பட்டியலில் ஆள் சேர்ப்பது, திருத்தம் செய்வது என்று பூத் அளவில் பணி களைச் செய்யுங்கள். உங்களுக்குப் பின்புல மாக நம் முதலமைச்சர்அவர்கள் என்றென் றும் இருப்பார். நானும் உங்களுக்குப் பின்புலமாக என்றென்றும் இருப்பேன்.

2026ஆம் ஆண்டு நம் ஆண்டாக தி.மு.க.வின் ஆண்டாக இருக்க வேண்டும். கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் இரண்டாவது முறையாக கழக ஆட்சி அமைத்தது என்ற ஒரு புதிய வரலாற்றை, இளைஞர் அணி தம்பிமார்கள் நாம் படைத் தாக வேண்டும். அதற்கு நீங்கள் ஒவ்வொரு வரும் இப்போதிலிருந்தே உழைப்பதற்கு தயாராக வேண்டும்.

**தலைவர் பாராட்டு!**

இங்கு பேசிய நிகழ்ச்சி தொகுப்பாளர் மாநில துணைச் செயலாளர் அப்துல் மாலிக் அவர்கள், அவர் நிகழ்ச்சியின் தொகுப்பாளர் தான், ஆனால் கிடைக்கின்ற வாய்ப்புகளில் எல்லாம், தான் என்ன சொல்ல வேண் டுமோ, உங்களின் குரலாக உங்களின் மன சாட்சியாகப் பலவற்றை அவர் பேசி விடுவார். அதுதான் அவரின் சாமர்த்தியம். அதுதான் இளைஞர் அணி. சொன்னார் இல்லையா 30 வருடம் அனுபவம் இருக்கிறது என்று. எனக்கெல்லாம் வெறும் ஐந்து வருடம் அனு பவம்தான்.

அவர் சொன்னார், இளைஞர் அணிச் செயலாளர் நிறைய வேலை வாங்குகிறார். வேலை செய்வதை விட, வேலை வாங்கு வது மிகவும் கஷ்டம் என்று சொன்னார். கிடையாது, வேலை வாங்குவது மிகவும் சுலபம். வேலை செய்வது தான் மிக கஷ்டம். அந்த வேலையை நீங்கள் அனைவரும் பகிர்ந்து செய்கிறீர்கள். சிறப்பாக செய்கிறீர் கள். தலைவர் பாராட்டுகின்ற அளவிற்குச் செய்கிறீர்கள். அதுதான் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. அவருக்கு என் நன்றி.

இங்கு உரையாற்றியவர்கள் நம் சேலம் மாநகர அமைப்பாளர் கேபிள் சரவணன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார், ` நம் கழகத் தலைவர் இளைஞர் அணிச் செயலா ளராக இருக்கும்பொழுது, நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அவ்வளவு சீக்கிரம் யாரையும் பாராட்டி விட மாட்டார். அவரின் வாயாலயே நம் தலைவரைப் பாராட்டினார். தலைவரின் பெயரைச் சொல்லி, ஸ்டாலின் என்றால் உழைப்பு. உழைப்பு.. உழைப்பு… என்று. இப்பொழுது நான் உழைத்துக் கொண்டிருக்கிறேன் அப்படி என்று சொன் னார். நான் என்ன சொல்கிறேன் என்றால், நம் தலைவர் அவர்கள் பாராட்ட வேண்டும். இந்த சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு அவர் சொல்ல வேண்டும்.

என் பெயரைச் சொல்ல வேண்டும் என்று அவசியம் இல்லை. இளைஞர் அணி என்று சொன்னால் `உழைப்பு, உழைப்பு, உழைப்பு' என்று நம் தலைவர் சொல்ல வேண்டும். நம் தலைவரும் அப்படித்தான் சாதாரணமாக பாராட்டிவிட மாட்டார். அவ ரைப் பாராட்ட வைக்க வேண்டும். அதற்கு நீங்கள் உங்களைத் தயார்படுத்தி கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கி றேன்.

அதேபோல் நம் ஜான் ரவீந்தர் அவர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார். அதையும் என்னால் முடிந்த அளவுக்கு சரி செய்ய முயற்சிக்கிறேன். சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் சகோதரர் வீரபாண்டி பிரபு அவர்கள் மூன்று கோரிக்கைகளை வைத்தார்கள். அதாவது எந்த மாவட்டத்திற்கு நான் சுற்றுப்பயணம் செய்தாலும் மாவட்ட அமைப்பாளரைக் கூடவே வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார். அது ஒன்றும் பெரிய கஷ்டமான விஷயம் கிடை யாது. அதை நேற்று நான் என் கண்கூடா கவே பார்த்தேன்.

சேலத்தில் வரவேற்பு கொடுக்கும் பொழுது வீரபாண்டி பிரபு அவர்கள், நான் கவனித்த தைப் பார்த்தாரா இல்லையா என்று தெரி யாது. எல்லா மாவட்டச் செயலாளரையும் முந்திக்கொண்டு அவர்தான் எனக்கு வர வேற்பு அளித்தார். நான் அடுத்த மாவட்டத்திற் குப் போய் விடுவேன். நீங்கள் அந்த மாவட் டத்தில் இருக்க வேண்டும். அதன் பிறகு அது உங்களின் சாமர்த்தியம். நான் என்றைக் குமே உங்கள்கூட இருப்பேன். உங்களுக் காக குரல் கொடுப்பேன். பிரபுவுக்கு இருக்கக் கூடிய அந்த தைரியம், துணிச்சல் அனைத்து அமைப்பாளர்களுக்கும் இருக்குமா என்பது எனக்குத் தெரியாது.

இன்னொரு கோரிக்கையும் வைத்தார். காவல்துறை கொடுக்கின்ற பாதுகாப்பைவிட, இளைஞர் அணி தம்பிமார்கள் நீங்கள்தான் எனக்கு அதிக பாதுகாப்பு என்று சொன்னார். அதை அறியாதவன் அல்ல நான். எதிர்க்கட் சியாகவும் இருந்திருக்கிறோம், ஆளும் கட்சி யாகவும் இருந்திருக்கிறோம் கண்டிப்பாக காவல்துறை எவ்வளவு பாதுகாப்பு கொடுக்கி றார்களோ அதைவிட 100 மடங்கு, எனக்கும் சரி, நம் தலைவருக்கும் சரி அதிகமான பாது காப்பு என்றால், அது இளைஞர் அணி தம்பி மார்கள் நீங்கள் தான் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

**இளைஞர் அணி பணி!**

அன்பகம் செந்தில் அவர்கள் உங்களுக் கும் எனக்கும் ஒரு பாலமாக இருப்பதாக கூறி யிருந்தார். பாவம் செந்திலைத் திட்டாதவர்கள் கிடையாது. நான் ஏற்கனவே சென்ற அமைப்பாளர்கள் கூட்டத்தில் சொல்லி இருந் தேன். செந்தில் அவருக்கான வேலைகளை மட்டுமல்ல, அவற்றுக்கும் அதிகமான வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்.

செந்தில் மட்டுமல்ல, இங்கு வந்திருக் கின்ற அனைத்து மாநில துணைச் செயலா ளர்கள் அத்தனை பேரும் அந்தப் பணிகளை எல்லாம் தங்களுக்குள் பிரித்துக் கொண்டு மாநிலம் முழுவதும் என்னால் பயணம் செய்ய முடியவில்லை என்றாலும், இளை ஞர் அணிப் பணிகளுக்காக அவர்கள் அத் தனை பேரும் தங்களின் பணிகளை எல் லாம் பிரித்துக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு நம் அனைவருக்கும், உங்களுக் கும் எனக்கும் ஒரு சிறந்த பாலமாக நம் மாநி லத் துணைச் செயலாளர்கள் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள் என்பதை யும் கூறிக் கொள்கிறேன்.

இங்கு உங்கள் எல்லோரிடமும் புகைப்ப டம் எடுத்துக் கொள்ள வேண்டும் நீங்களும் ஆசைப்படுகிறீர்கள் நானும் ஆசைப்படுகி றேன். ஒவ்வொருவரோடும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எனக்கும் ஆசை உங்களுக்கும் ஆசைதான். ஆனால், அப்படி எடுக்க ஆரம்பித்தால் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் ஆகும். நான் இதை முடித்து விட்டு, அடுத்து திண்டுக்கல்லுக்கு இன்று இரவு போய் சேர வேண்டும். நாளை காலை திண்டுக்கல்லில் ஒரு கழக திருமண நிகழ்ச்சி இருக்கிறது.

எனவே, ஒவ்வொரு மாவட்ட அமைப்பா ளர்களும் துணை அமைப்பாளர்களும் வரி சையாக வந்தீர்கள் என்றால், உங்கள் அத் தனை பேருடனும் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டு அந்தப் பணியை முடித் துக் கொண்டு நாம் அடுத்தடுத்த பணிகளில் ஈடுபட வேண்டும்.

எனவே வந்திருக்கின்ற அனைத்து மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப் பாளர்கள் தயவு செய்து நீங்கள் எல்லாம் சாலை வழியாக வந்திருப்பீர்கள். இரயில் மூலமாக வந்திருப்பீர்கள். அனைவரும் பாது காப்பாக நீங்கள் எல்லாம் உங்களின் வீடுக ளுக்குச் சென்று சேரம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மாவட்ட அமைப்பா ளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தை இவ்வளவு சிறப்பாக நடத்திக் காட்டிய நம் மாநிலத் துணைச் செயலாளர்களுக்கு நன்றி.

ஆலோசனைக் கூட்டத்துக்கு வந்து கலந்து கொண்ட அனைத்து மாவட்ட, மாநில, மாநகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்து வாய்ப் புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

இதில் மாநில துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, இளையராஜா, அப்துல் மாலிக், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், பிரபு கஜேந்திரன், ஜி.பி.ராஜா, ஆனந்தகுமார் ஆகியோரும், இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர் அன்பகம் செந் தில், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண் ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், எபினேசர், பிரபாகர்ராஜா உள்ளிட்ட மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களும் பங்கேற்றனர்.

முன்னதாக மாநில துணைச்செயலாளர் பி.எஸ்.சீனிவாசன், மாவட்ட அமைப்பாளர் கள் வீரபாண்டி ஆ.பிரபு, ஜான் ரபீந்தர், மாந கர அமைப்பாளர் கேபிள் சரவணன் ஆகி யோர் உரையாற்றினர்.

சேலம் மத்திய மாவட்ட அமைப்பாளர் அருண்பிரசன்னா வரவேற்புரையாற்ற, சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் மணி கண்டன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கடலூர் இரெ. இளம்வழுதி
அக்டோபர் 22 (1970)



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிடர் கழக மாணவர் அமைப்புக்கு செயலாளராக இருந்தவர்.

தி.மு.க. தொடங்கிய நாளிலிருந்து பல்வேறு பொறுப்புகளில் செயல்பட்டவர்.

'பொன்மொழி' என்ற கழக இதழை தனது இறுதி காலத்தில் தொடங்கி நடத்தினார்.

தலைசிறந்த வழக்கறிஞராக, தலைமைக் கழகப் பேச்சாளராக விளங்கினார்.

1967ல் சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றியுள்ளார். அறிஞர் அண்ணாவால் 'கறுப்பு இளவரசர்' என அழைக்கப்பட்ட இவர், தலைவர் கலைஞரின் ஆருயிர் நண்பர். இறுதி மூச்சு வரை, இயக்கப் பணியாற்றிய பகுத்தறிவு பண்பாளர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## தொடர் கனமழை: வேகமாக நிரம்பும் நீர்நிலைகள்!

சென்னை, அக். 22–

தமிழ்நாட்டில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக மாநி லத்தின் பல்வேறு இடங்களில் உள்ள நீர் நிலைகள் வேகமாக நிரம்பி வருகி றது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர். திருப்பூர் மாவட்டத் தில் நேற்று முன்தினம் பரவலாக மழை பெய்துள்ளது. இதில் உடு மலை மாவட்டத்தில் அதிக அளவில் 10 செ.மீக்கு மேல் மழை பதிவாகி யுள்ளது. அமராவதி அணை தனது முழு கொள்ளளவை நெருங்கி வருகி றது. இதனால் எந்த நேரமும் அமரா வதி அணையில் இருந்து நீர் வெளி யேற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படு கிறது.

மேற்கு தொடர்ச்சி மலைகளில் மழை அதிகமாக பெய்து வருவதால், திருமூர்த்தி மலையில் உள்ள பஞ்ச லிங்க அருவியில் காட்டாற்று வெள் ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் அங் குள்ள கோவில் நிர்வாகம் பக்தர்கள், சுற்றுலாப்பயணிகள் பஞ்சலிங்க அருவிகளுக்கு செல்ல வேண்டாம் என தடை விதித்துள்ளனர். தொடர்ந்து பொதுபணித்துறையினர், வனத்து றையினர், கோயில் நிர்வாகத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள் ளனர்.

தொடர்ந்து காவிரி நீர்பிடிப்பு பகு திகளில் பெய்துவரும் மழை காரண மாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 15,929 கனஅடியில் இருந்து 18094 கனஅடியாக அதிக ரித்துள்ளது. தொடர் நீர்வரத்து கார ணமாக மேட்டூர் அணையின் நீர்மட் டம் 97.89 அடியாக உயர்ந்துள்ளது. மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்காக வினாடிக்கு 3000 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. இத னால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந் துள்ளனர்.